பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 17 ஆம் திங்கட்கிழமை (01-7-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 208

ஜே. ஆர் — ராஜீவ் செய்து கொண்ட

# ஒப்பந்தத்தை மீறுவதாக இந்தியா கடும் ஆட்சேபம்

## "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" விவகாரத்தால் ஸ்ரீலங்காவுடன் அதிருப்தி ஏற்படும் நிலை

கொழும்பு, ஜூலை 1

1987 ஜூலையில் கைச்சாத்திடப்பட்ட ஜே. ஆர். — ராஜீவ் ஒப்பந்தத்துக்கு முரணாக அமெரிக்காவின் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" வானொலியின் அதிசக்தி வாய்ந்த ஒலிபரப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு, இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்திருப்பது குறித்து, இந்தியா தனது கவலையையும், ஆட்சேபத்தையும் தெரிவித்திருக்கிறது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. முச் குந்த் துபே நேற்று முன்தினம் கொழும்பு வந்து, இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்தினாவிடம் தமது நாட்டின் ஆட்சேபத்தை நேரில் தெரிவித்தார்.

இந்தியாவின் புதிய அரசாங்கம் பதவியேற்ற ஒரு வாரத்திற்குள் இப்படி ஒரு மனமொவ்வாத சூழ்நிலை உருவாகி இருப்பது இரண்டு நாடுகளிடையேயான உறவில் விரிசலை ஏற்படுத்தலாம் என்று அரசியல் அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்திய அரசு தனது ஆட்சேபத்தை முதலில் எழுத்து மூலம் அறிவித்தது. இலங்கையின் பதிலை எதிர்பார்க்காமல் — வெளியுறவுச் செயலாளர் மட்டத்தில் நேரில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருப்பது —

ராஜீக ஒழுங்கு நடைமுறைகளில் சற்றுக் காட்டமானது என்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திர வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் பிரச்சினைத் தீர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



வாழப்பாடியார் மீண்டும் மீண்டும் ஒரே பாட்டைத் தான் பாடிக் கொண்டிருக்கிறார்.....!

## பாக்கு நீரிணைக் கடலில் இந்தியப் படையினர் உஷார்

பாக்கு நீரிணையில் இந்தியக் கடற்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வரும் ஒற்றைக் கண் நபர் சிவராசனும் அவரது சகாவான சுபாவும் இலங்கைக்கு தப்பிச் செல்வதற்காக இராமநாதபுரம் பகுதிக்குச் சென்றிருக்கின்றனர் என்ற தகவலைத் தொடர்ந்தே படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## சகல ஈழ அகதிகளையும் திருப்பி அனுப்ப வேண்டும்!

### வாழப்பாடி மீண்டும் வலியுறுத்து

சென்னை, ஜூலை 1

இலங்கைத் தமிழ் அகதிகளில் யார் உண்மையான அகதிகள், யார் பேராளிகள் என்று இனங்காண முடியாத இந்தத் தருணத்தில், அவர்கள் அனைவரையுமே ஐ. நா. மேற்பார்வையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி விட வேண்டும்.

இந்திய மத்திய இணை அமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று சேலத்தில் செய்தியாளர்கள் மத்தியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிலைப்பாட்டை மத்திய அரசிடம் வலியுறுத்தும்படி முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து கோரப்போவதாகவும் வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னார். (ஒ-எ-த)

## பெரியபோரதீவில் தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரியபோரதீவில் நேற்று முன்தினம் சின்னத்தம்பி தங்கராசா (வயது 37) என்ற தமிழரை இராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து சுட்டுக் கொன்றுள்ளனர்.

'கப்பம்' தர மறுத்ததாலேயே சம்பந்தப்பட்டவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

தீர்வுக்கு புதிய ஒப்பந்தம்:

## ஜெயலலிதாவின் கூற்று குறித்து பிரட்மன் கருத்து

கொழும்பு, ஜூலை 1

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய ஒப்பந்தம் ஒன்று தேவைப்படுவதாக தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருப்பது குறித்து ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கருத்து வெளியிடுகையில்—

''இது குறித்து கவனத்துக்கு எடுத்துள்ளோம். இந்திய அரசிடம் இருந்து இந்த யோசனை பற்றிய விவரங்களை எதிர்பார்க்கின்றோம்'' என்று சொன்னார்.

### நரசிம்மராவ்

இதேவேளை—

இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தொடர்பான தமது கொள்கையை பிரதமர் நரசிம்மராவ் இன்னும் வெளியிடவில்லை.

எனினும் - ராஜீவ் கொலையைத் தொடர்ந்து ஏற்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

வெளியுறவுச் செயலாளர்

## மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 1

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை கிறிஸ்டி (மகேந்தி— இளவாலை) என்பவருக்கு சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முயன்றதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஒ)

1990 ஜூன் முதல் 1991 மே வரை

## மட்டக்களப்பு அகதிகளுக்கு 14 வாரங்களுக்கே நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடபகுதி மாவட்டங்களில் மட்டுமன்றி கிழக்கின் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நிவாரண உதவிகள் மற்றும் உணவு விநியோகம் என்பன மிகக் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் ஜூன் மாதம் தொடக்கம் இவ்வருடம் மே மாதம் வரை, அகதிகளுக்கு நிவாரணமாக 14 வாரங்களுக்குரிய உலர் உணவுப் பொருள்களே வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் உரிய முறைப்படி மொத்தம் 44 வாரங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்று மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரச அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஏனைய முக்கிய தகவல்கள் வருமாறு:

★ ஜூன் மாத இராணுவ நடவடிக்கைகளைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு குண்டு வெடிப்பு:

## லெபனானில் பயிற்சிபெற்ற வரதனை தேடுகிறார்களாம்

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மீதான கார்க் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் புலோலியைச் சேர்ந்த வரதன் என்பவரைக் கைது செய்வதற்கு தீவிர தேடுதலை பாதுகாப்புப் படையினர் நடத்திவருகின்றனர். இப்படி கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலோலி வரதன் லெபனானில் யுத்தப் பயிற்சி பெற்றவராம். (இ-த)

## உண்மை வரலாற்றைப் புகட்ட ஆசிரியர் முன்னின்று உழைக்க வேண்டும்

### கருத்தரங்கில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை1

சிங்களவர் எமது வரலாற்று உண்மைகளை மறைத்து, மாணவர்களைத் திசைதிருப்ப முயலுகின்றனர். இதனை முறியடிக்க ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோர் தமிழரின் வரலாற்று ரீதியான உண்மைகளை மாணவருக்குப் புகட்டுவதிலும் புரியவைப்பதிலும் முன்னின்று உழைக்கவேண்டும்'.

நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்கில் உரையாற்றும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஞ்ஞான மன்றமும், யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத் துறையும் யாழ் மாவட்ட கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது;

பண்டைய தமிழன் பெருமையுறப் புகழோடு வாழ்ந்தான். ஆனால் அது உரிய முறையில் வெளிக்கொணரப்படவில்லை. உண்மைக்குப் புறம்பாகவே அவை திரிபு படுத்திக் கூறப்படுகின்றன.

யாழ்ப்பாண அரசர்களின் வரலாறுகள், சங்கிலியன், எல்லாளன் போன்றவர்களின் வரலாறுகள் மறைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள், ஓர் இனத்திற்கு வரலாறு எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படைத் தாக்குதலுக்கு மேலும் இரு இசுசு வாகனங்கள்!

### கொழும்பில் தயாராக இருப்பதாகப் படை வட்டாரங்களில் அச்சம்

கொழும்பு, ஜூலை 1

கொழும்பில், கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தின் மீதான குண்டுத் தாக்குதலை நடத்தப் பயன்படுத்தப்பட்ட வாகனம் போன்ற மேலும் இரண்டு இசுசு வாகனங்கள் [illegible] யினரிடம் இருப்பதாகப் பொலீஸார் கருதுகின்றனர்.

அது சம்பந்தமாகத் திட்டவட்டமான தகவல் தமக்குக் கிடைத்திருப்பதாகப் பொலீஸ் வட்டாரங்கள் கொழும்புப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளன.

அந்த இரண்டு வாகனங்களையும் தற்கொலைப் படையினர் மேலும் குண்டு வெடிப்புகளை நடத்துவதற்குப் பாவிக்கக் கூடும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் அஞ்சுகின்றன.

அந்த இரண்டு வாகனங்களையும் கண்டால் அல்லது அவை குறித்துத் தகவல் தெரிந்தால் தமக்கு அறிவிக்குமாறு பொலீஸார் பொது மக்களைக் கேட்டுள்ளனர். சரியான தகவல் தருபவருக்கு பத்து லட்சம் ரூபா சன்மா

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எது வாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக் களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக் நிபுணரை கலந்தாலோசியுங்கள் "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன் பக்) : தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (17350)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 491, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4156]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை காலவியல், குக்கருத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராமநாதன், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (4170)

### சோதிடம்

உங்கள் வாழ்க்கையில் எந்த வகைப் பிரச்சினையும் உங்கள் சாதகத்தை ஆராய்ந்து நிவிர்த்தி செய்யப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 146, பருத்தித்துறை வீதி, அரசடிச்சந்தி, நல்லூர். (17351)


## லெப். செல்லக்கிளி நினைவு தினப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 1 லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் எட்டாவது ஆண்டு நினைவு தினத்தை யொட்டி மென்பந்துக் கிரிக்கெட்போட்டி ஒன்று நடைபெற உள்ளது.

7பேர் கொண்ட 10 ஓவர் கிரிக்கெட்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் இம் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சன சமூக நிலையத்தில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். (த - 5)

## சூதாடியவர்கள் கைது

நுணாவில், ஜூலை 1 கடந்த வாரம் சாவகச்சேரி நகரில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 6 பேர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப் பட்டனர். சாவகச்சேரி நகரப் பொறுப்பாளர் அவர்களை எச்சரிக்கை செய்த பின் விடுதலை செய்தார். (த)

## பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜூலை 1 வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்பிக்க, பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. (த-118)

## நினைவஞ்சலி

31 ஆம் ஆண்டு | ஓராண்டு



அமரர்
**நாகலிங்கம் திருஞானசம்பந்தர்**
[முன்னைநாள் ஆசிரியர் மீசாலை வீரசிங்கம் சைவவித்தியாசாலை]

தோற்றம்: 22 - 07 - 1913. மறைவு: 02 - 07 - 1960



திருமதி
**திருஞானசம்பந்தர் யோகாம்பிகை**
[இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்]

தோற்றம்: 23 - 08 - 1920 மறைவு: 01 - 07 - 1990

உங்கள் ஆத்மா சாந்தியுடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:
— குடும்பத்தினர்.

மீசாலை. [17346]

## ஓராண்டு நினைவஞ்சலி

கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து



பிறப்பு: 10-08-1920
இறப்பு: 11-07-1990

திதி:
01 - 07 - 1991

எங்கள் ஆசை அன்பு ஐயாவே!

ஐயா நீங்கள் எங்களை விட்டு பிரிந்து ஓர் ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகன், மகள், மருமகன் மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். [17361]


உ
சிவமயம்

## சைவசித்தாந்த சி. வ. ஞான உயர் கல்வி நிறுவனம்

★ இலவசப் பயிற்சி நெறிகள்
★ மெய்கண்ட சி. வ. ஞான வழிபாடு
★ வயது, கல்விக்கு ஏற்பபிரிவுகள்
★ பட்டதாரிகளுக்குத் தனிப்பிரிவு
★ நடமாடும் சேவையும் உண்டு.
★ சிறப்புச் செந்தமிழ்ப் பயிற்சிகள்

எழுத்தில் விண்ணப்பிக்கவும்.

சித்தாந்தகலாநிதி, மகாவித்துவான்,
க. கணபதிப்பிள்ளை,
கௌரவ அமைப்பாளர்,
55/44, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

[17366]


## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**இரத்தினசபாபதி நகுலேஸ்வரி**
(அனுசம்மா)

வையத்துள் அறிமுகம்: 14 - 05 - 1930
தெய்வத்துள் சங்கமம்: 11 - 07 - 1990

திதி: 01 — 07 — 1991

அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செல்வநாயகம் வீதி, வேலணை - 2. (17132)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தூல முகிழ்ப்பு: 16 — 11 — 1943



தூல அழிப்பு: 15 — 06 — 1987

அமரர் திரு.
**காசி பிள்ளை கனகலிங்கம்**
(இவாகன் கொம்பனி, கொழும்பு)

திதி: 01 — 07 — 1991

அன்பின் பிறப்பிடமே ஆதரித்த - நீ
என்றும் எமக்காக உருகினையே
இன்புற்று யாம் வாழ வழிவகுத்த
மன்னவனே! எமை விடுத்து விண்புகுந்தது
தென்னவன் அழைப்போ? அன்றி
அன்னவன் அருள் வேண்டி எமக்கியும்
செம்மை நினைப்போ செப்பு!

அன்பு மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள்.

சுத்தர்மடம், யாழ்ப்பாணம். (4182)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 12 - 12 - 1925

மறைவு: 01 - 06 - 1991

திதி: 01 - 07 - 1991

திருமதி
**செல்லம்மா கனகரத்தினம்**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

13/3, நாயன்மார் வீதி, நல்லூர். [17363]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சுபவேளை இதுவே!

இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப, சுயபூர்த்தியான ஒரு பொருளாதார வடிவத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். நாளைய தமிழீழத் தேசத்தின், தனித்த, தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கான வழிகாட்டியாக அந்தப் புதிய வடிவம் அமைய வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா [மாத்தையா] பனைவளம் சம்பந்தமான ஆய்வரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார்.

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள், இப்போது என்றுமே இல்லாத ஒரு புதிய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கைப் பின்னணி மிகவும் மாற்றமடைந்திருக்கிறது; வாழ்க்கை வசதிகள் மிகவும் சுருங்கிப் போயுள்ளன.

தேச சுதந்திரத்துக்காகப் போராடும் போது, ஏனைய இன்னல்களுடன் பொருளாதாரக் கஷ்டங்கள் உருவாகுவது இயல்பு. அதுவும் தங்கு நிலைப் பொருளாதாரத்தை உடைய தமிழ்ப் பிரதேசங்களில் பொருளாதாரம் மிகப் பெருமளவில் நலிவடையும்.

அரசாங்கம் பொருளாதாரத் தடைகள் மூலம் போராட்டத்தை ஒடிக்க, ஒடுக்க நினைக்கும் போது, பொருளாதாரக் கஷ்டங்கள் மேலும் மலியும். அத்தகைய ஒரு பொருளாதார நெருக்கடியே தமிழர்களை இன்று எதிர் நோக்கி உள்ளது.

எனினும் அதனை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டாக வேண்டும். பொருளியல் போராட்டத்தில் வெற்றி காண்பதற்கு, முயற்சி, சரியான வழியில் திட்டமிடுதல், தனி மனிதர்கள் தங்கள் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளுதல் — உற்பத்தியைப் பெருக்குதல் அதில் ஈடுபடுதல், உள்ளூர்ப் பாவனைக்குத் தேவையான பொருள்களின் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்குதல், உள்ளூர் உற்பத்திகளையே பாவித்தல் ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன.

தனி மனிதனின் தனிப்பட்ட வருவாய்க்கு முன்னிடம் தராமல், கூட்டு மொத்தமாக தமிழ்ப் பிரதேசத்தின் தேவைக்கு முதலிடம் தரக்கூடிய ஒரு பொருளாதாரக் கட்டமைப்பு இன்றைய சூழ்நிலையில் மிகவும் தேவை. அப்போது தான் நாம் தங்கு நிலைப் பொருளாதார அடிமையிலிருந்து விடுபடமுடியும்; விடுதலை காண முடியும்.

எங்கள் மண் வரண்ட பூமி என்பது உண்மை தான். என்றாலும் இயற்கை அன்னை எங்களைக் கைவிடவில்லை. பயிர்ச் செய்கை விவசாய வளத்துக்குப் பதிலாகப் பல மாற்று வளங்களை அவள் தன் மடிக்குள் வைத்திருக்கிறாள். அந்த வளங்களை இனங்கண்டு தக்கபடி பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வும், முயற்சியும் குன்றிய சோம்பேறிகளாக நாம் இருப்பதனாலேயே, இத்தனை காலமாகத் தங்கு நிலைப் பொருளாதார அமைப்புக்குள் முடங்கிக் கிடக்கிறோம்; அடிமைப்பட்டு உழல்கிறோம். இது கவலைக்குரியது; வெட்கக்கேடானதும் கூட!

இந்நிலையிலிருந்து மீண்டு, பொருளாதாரத்துறையில் நாம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமானால், எமக்கென சுயமான, தனித்துவமான, தன்னிறைவு தரவல்ல பொருளாதாரக் கட்டமைப்புக்கு உடனடியாக கால்கோள் இடப்பட வேண்டும். இத்தருணமே, அதற்குரிய சகல நன்மையும் பயக்கக்கூடிய, சுபவேளையாகும்.

# காணாமற் போனோரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், ஜூலை 1

இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற் போனோரின் குடும்பங்களும் நஷ்டஈடு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடும் பாதிப்புற்றோர் நிவாரணத்திட்டத்தின் கீழ், இந்த நஷ்டஈடு வழங்குவது குறித்து சுற்றுநிருபம் ஒன்று யாழ். செயலகத்துக்கு வந்துள்ளது.

காணாமற் போன பலருக்கு மரணச் சான்றிதழ் பெறமுடியாததால், நஷ்டஈடு பெறுவதில் சஷ்டநிலை இருந்து வந்தது.

புதிய சுற்றுநிருபத்தின்படி மரணச் சான்றிதழ் பெற்று நஷ்டஈடு பெறுவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. (ஓ-3)

## நெடுந்தீவுக்கு வந்தது பழுதடைந்த அரிசி

சமீபத்தில் கிரிபா கப்பல் மூலம் நெடுந்தீவில் இறக்கப்பட்ட அரிசி பாவனைக்கு உகந்ததாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

கப்பலில் இருந்து இறக்கப்பட்ட இரண்டாயிரம் மூடை வெள்ளைப்பச்சை அரிசியும் மூப்பு நிறத்தில் காணப்படுகின்றது. இத்துடன் இறக்கப்பட்ட நூறுமூடை மாவும் சிறிது பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. (இ-111)

## எழுவைதீவில் மீன்பிடி பாதிப்பு

அனலைதீவு, ஜூலை 1

எழுவைதீவு மக்கள் மீன்பிடித்தொழில் செய்ய முடியாத நிலையிலுள்ளனர்.

அண்மையில் எழுவைதீவில் படையினரால் ப. நோ. கூ. சங்கக் கிளை முகாமையாளர் கைது செய்யப்பட்டுத் தாக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் அவர் அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

அன்று தொட்டு இதுவரை எழுவைதீவில் ஒருவித உணவுப் பொருளோ, மண்எண்ணெய், தீப்பெட்டி எதுவுமோ வழங்கப்படவில்லை. (இ-18)

## படகுச்சேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு ஜூலை 1

நெடுந்தீவு- குறிகாட்டுவான் சேவையில் உள்ள அரச படகு குமுதினி பழுதடைந்ததை அடுத்து நெடுந்தீவுப் படகுச் சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குமுதினிப் படகை தாங்கள் திருத்தித் தருவதாகக்கூறி கடற்படையினர் நயினாதீவில் உள்ள தமது முகாமுக்கு எடுத்துச் சென்று விட்டனராம். (இ - 111)

## திருட்டுக் கோஷ்டி பிடிபட்டது

களவாக மாடு வெட்டிய திருட்டுக் கோஷ்டி ஒன்று விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டது. இச்சம்பவம் அண்மையில் நவக்கிரியில் இடம் பெற்றது. (த-15)

## கலை, இலக்கிய இதழ் பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை, 1

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் புதிதாக வெளியிடப்பட இருக்கும் கலை, இலக்கிய இதழ் பற்றிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டு மேலான ஆலோசனைகளை வழங்கும்படி அழைக்கப்படுகின்றனர்.

முத்தமிழ்விழாப் பிரகடனத்தின்படி வெளியிடப்பட இருக்கும் இந்தக் கலை, இலக்கிய இதழ் விரைவில் வெளி வருவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## கற்குளியில் திருட்டு

தென்மராட்சி, ஜூலை 1

வீட்டிலிருந்தோரை அறை ஒன்றில் விட்டு பூட்டிவிட்டு குட்கேஸுக்குள் இருந்த ரூபா 50ஆயிரம் பணமும், ரூபா 20 ஆயிரம் பெறுமதியான பொருள்களும் கொள்ளை அடிக்கப்பட்டன.

சாவகச்சேரி கற்குளியில் கடந்த 27ஆம் திகதி இச்சம்பவம் நடந்தது. (இ-117)

# ரூ. 1500க்கு மேல் வருமானம் பெறுவோருக்கு நிவாரணம்

## யாழ். அரச அதிபர் முயற்சி

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத் திட்டத்தின் கீழ் 1,500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோருக்கும் இலவசமாகப் பொருள்களை வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

3 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறும் சகலருக்கும் இலவச நிவாரண விநியோகம் கிடைக்க வசதி செய்ய வேண்டும் என்று அரச அதிபர் கோரிக்கை விடுத்திருந்தார்.

1,500 ரூபாவுக்கு உட்பட்ட மாதாந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே இலவச நிவாரணம் வழங்க வேண்டும் என்ற மந்திரி சபையின் முடிவுக்கு இணங்கவே தற்பொழுது நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது—

இது விடயமாக மீண்டும் மந்திரி சபையின் அங்கீகாரம் கிடைத்தால் மட்டுமே இலவச நிவாரணம் வழங்க முடியும் என்றும், அரச அதிபரின் கோரிக்கை மந்திரி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும்— அத்தியாவசிய சேவைகள் நாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-3)

# இனரீதியான கொள்கை நெருக்கடிக்கு காரணம்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 1

இனமதரீதியான கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததினால் தான் வடக்கு-கிழக்கு நெருக்கடி ஏற்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாசா கம்புறுபிட்டிய கம் உதாவ கண்காட்சியில் இடம் பெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

'ஆயுதப் போராட்டத்தின் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றுக் கொடுக்க முயல்வதை அஹிம்சை வழி மூலம் வழங்க நான் முயற்சித்து வருகின்றேன்' —என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். [இ-எ]

## சிப்பாய்க்கு ஏற்பட்ட ஆசை

யாழ்ப்பாணம், ஜூலை 1

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும், பிரயாணிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகளுக்கும், படையினரின் சோதனை நிலையங்களில் பல்வேறு அவலங்கள் ஏற்படுகின்றன.

அவைகளில் அனேகமானவை கசப்பானவையாகவே இருக்கும். எப்போதாவது ஒன்று விசித்திரமானதாக இருக்கும்.

சமீபத்தில் கொழும்பில் இருந்து வந்த பிரயாணி ஒருவருக்கு வவுனியா காவல் நிலையத்தில் நின்ற சிப்பாய் ஒருவர் தனது ஆசையை வெளியிட்டாராம்.

''ரயினால் ஊதி இயங்கச் செய்து, மண்எண்ணெயில் ஓடும் மோட்டார் சைக்கிள் ஒன்று என்ன விலையானாலும் பரவாயில்லை கொண்டு வந்து தர முடியுமா?'' என்று அந்த சிப்பாய் கேட்டாராம்.

பிரயாணியும் விட்டுக்கொடுக்கவில்லை 'அது தமிழ் ஈழ ஆய்வு நிறுவனத்தின் கண்டு பிடிப்பு. வடக்குக்கு வெளியே கொண்டு வர முடியாது' என்று பதில் அளித்து விட்டு நழுவிக் கொண்டார் என்று கூறப்படுகிறது. [இ-124]

# முஸ்லிம்களும் ஏற்கக்கூடிய ஒரு தீர்வுக்கு உதவுங்கள்

## ஜெயலலிதாவுக்கு அஷ்ரப் செய்தி

கொழும்பு, ஜூலை, 1

இலங்கையின் வடக்கு—கிழக்கில் சிந்தப்படும் இரத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து முஸ்லிம் சிறுபான்மைச் சமூகமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு உருவாக நீங்களும், உங்கள் கட்சியும் தமிழ்நாடும் எங்களுக்கு உதவ வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ள ஜெயலலிதாவுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏ. எச். எம். அஷ்ரப்.

வடக்கு - கிழக்கு இணைப்புக்குள் சுய பாதுகாப்புடன் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ விரும்புகின்ற முஸ்லிம்களின் அபிலாஷைகள் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தம் புதிய பார்வையுடன் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு நீங்கள் மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கும்.

இப்படி அந்த வாழ்த்துச் செய்தியில் அஷ்ரப் மேலும் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் செயலாளர் ஏ எச் ஜி. அமீன் ஜெயலலிதாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் 1987 இலங்கை—இந்திய ஒப்பந்தத்துக்கு பதிலாக புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் யோசனையை வரவேற்றுள்ளார்.

புதிய ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இது தொடர்பாக முஸ்லிம் தூதுக்குழு ஒன்று தமிழகம் வந்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் யோசனை தெரிவித்துள்ளார். (இ)

## வெள்ளோட்டம்

மயிலணி, ஜூலை 1

சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோவிலுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா எதிர்வரும் ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி, தேர்த் திருவிழா பத்தாம் திகதி புதன்கிழமை காலை நடைபெறும் (அ-89)

## சட்டசபைக் கூட்டம்

சென்னை, ஜூலை 1

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டம் இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை மாநில ஆளுநரால் அழைக்கப்பட்டுள்ளது.

சபையின் தற்காலிக சபாநாயகராக இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஏ. எஸ். பொன்னம்மாள் தலைமை வகித்து புதிய உறுப்பினர்களுக்கு சத்தியப் பிரமாணஞ் செய்து வைப்பார். (த-எ)

# மண்ணை, மக்களைக் காக்க

## தேசிய விடுதலைப் படை தேவை

### வன்னி அரசியல் பொறுப்பாளர் மனோ சொல்கிறார்

கிளிநொச்சி, ஜூலை 1

எமது மக்களையும், எமது மண்ணையும், எமது எல்லைகளையும் காப்பாற்றுவதற்கு தேசிய விடுதலைப் படை ஒன்று தேவை. அதனை வளர்த்து எடுப்பது தமிழ் மக்களின் கடமை. வீட்டுக்கு ஒரு வீரனைப் பெற்றோர்கள் தேசியப்படைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ.

லெப். கேர்ணல் சந்திரனின் (கண்ணாடி) நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த வார இறுதியில் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அங்கு பேசுகையிலேயே திரு. மனோ முன் கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இலக்கியன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. மனோ தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது;

தமிழர் இன்று தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழ எமது மாவீரர்களின் கடின உழைப்பும், உயிர்த் தியாகமுமே காரணம். மாவீரர்களின் பாதையில் சென்று நாம் எமது இலட்சியப் பயணத்தை முடித்தே தீருவோம்.

எங்கள் இலக்குத் தெளிவானது. தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்யப்பட்டால் அல்லது அவர்கள் இம்சிக்கப் பட்டால் அதற்கு முகம் கொடுக்க நாம் தயாராக உள்ளோம். எமது தலைவர் பதிலடி கொடுக்க என்றும் தயாராகவே உள்ளார்— என்றார்.

### இணைய வேண்டும்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி... [illegible] ... இலக்கியன், தமது உரையில் கூறியதாவது:-

லெப். கேர்ணல் சந்திரன் 1984 இல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு அரசியல் வேலைகளில் ஈடுபட்டார்.

சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், நிர்வாகியாகவும், போர்த்திறமை கொண்டவராகவும் அவர் திகழ்ந்தார்.

இந்திய இராணுவத்தினருடனான இராணுவ நடவடிக்கைகளிலும், கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பிலும் அவர் பெரும் பங்காற்றினார் - என்றார்.

இதே வேளை லெப். கேர்ணல் சந்திரனின் நினைவாக பல்வேறு அஞ்சலி நிகழ்ச்சிகள் கிளிநொச்சிப் பகுதியில் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி நகரமெங்கும் விழாக்கோலம் பூண்டுள்ளது. எங்கும் சிவப்பு, மஞ்சள் நிற காகித தோரணங்களும், வாழை, தோரணங்களும் காணப்படுகின்றன.

அஞ்சலிக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், சிரமதானங்கள் போன்றவையும் நடைபெற்று வருகின்றன. [த-76]

முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா பேசுகையில் தெரிவித்ததாவது;

இன்று நடைபெறும் எமது விடுதலைப் போராட்டத்தில் எல்லா தரப்பு மக்களும் இணைய வேண்டும். அவ்வாறு இணையாமல் விட்டால் எம் முன்னோர் விட்ட பிழையை மீண்டும் நாம் விடுவது மட்டுமன்றி எமது போராட்டமும் பின் தள்ளப் படலாம்.

இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட, எல்லைகள் பாதுகாக்கப்பட இன்று எமக்கு இளைஞர்களைக் கொண்ட தேசியப் படை ஒன்று தேவை. அதனால் உங்கள் பிள்ளைகளை தேசிய விடுதலைப் படையில் இணைந்து போராட நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கு கடலில் ஸ்ரீலங்கா படையினர் தாக்கு

வடமராட்சிக் கிழக்கு கடற் பிரதேசத்தில் வைத்து, ஸ்ரீலங்காப் படையினர் கடற்றொழிலாளர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அண்மையில் இரவு நேரத்தில் படையினர் நடத்திய தாக்குதலில் வயோதிபத் தொழிலாளி ஒருவர் மண்டை உடைந்து, 12 மணித்தியாலங்களாக நடுக்கடலில் — இரத்தம் ஓடிய நிலையில் — தவிக்க வேண்டியதாயிற்று.

படகில் தொழிலுக்குச் சென்ற இவரையும் படையினர் முதலில் மோசமாகத் தாக்கியுள்ளனர். பின்னர் அவர்களின் ''பிளாஸ்டிக்'' படகு மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

அப்போது படகும் அதன் இயந்திரப் பகுதியும் சேதமடைந்தன.

கட்டைக்காட்டைச் சேர்ந்த மத்தேயு ஜேம்ஸ் (65 வயது) என்பவரை கனமான ஆயுதம் ஒன்றினால் படையினர் தாக்கினர்.

மண்டை பிளந்து இரத்தம் ஓடிய நிலையில் 12 மணித்தியாலங்களுக்கு மேலாக அவர் நடுக்கடலிலேயே கிடக்க நேரிட்டது.

படையினர் திரும்பும்போது ''கிழவன் சாகப் போகிறான்'' என்று கூறிச் சென்றுள்ளனர்.

மறுநாள் வேறொரு படகில் சென்றவர்கள் அவர்களை மீட்டு வந்தனர்.

## ராஜினாமா

புதுடில்லி ராஜ்யசபையில் உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சிக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து முன்னாள் மத்திய அமைச்சர் பி. சிவ் சங்கர் ராஜினாமாச் செய்து விட்டார்.

பிரதமர் பதவிக்கான போட்டியில் திரு. சரத்பவாருக்கு தமது ஆதரவைத் தெரிவித்த திரு. சிவ் சங்கருக்கு பிரதமர் நரசிம்மராவ் அமைச்சர் பதவி வழங்க மறுத்து விட்டார் என்ற காரணத்தினால்தான் சிவ்சங்கர் கட்சித்தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டத்தில் இவர்களும்

கொழும்பு, ஜூலை 1

கொழும்பு மாநகரிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இராணுவ அதிகாரிகள் கூட்டிய மாநாடு ஒன்றில் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது. (இ-ன)

## உண்மை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதை உணர்ந்து மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

### தொடராண்டு

எமது பண்டைய இலக்கியங்கள் படைக்கப்பட்ட காலங்கள் சரிவரத் தெரியவில்லை. எமக்கென்ற ஒரு தொடராண்டு இல்லாததாலேயே இந்தக் குறைகள் ஏற்பட்டன. தனி ஒருவரின் வரலாற்றையே எழுத முடியாத 60 ஆண்டுகளைக்கொண்ட தொடராண்டு முறையை வைத்துக்கொண்டு நாம் எவ்வாறு எமது வரலாற்றை எழுத முடியும். எனவே தமிழரும் தமக்கென்று ஒரு தொடராண்டைப் பயன்படுத்தவேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டே 1921இல் தமிழ் நாட்டில் சில அறிஞர்கள் கூடி திருவள்ளுவர் ஆண்டை உருவாக்கினர். ஜனவரி, பெப்ரவரி மாதங்களை அப்படியே தை, மாசி எனத் தமிழ்ப்படுத்துவதனால் சில சிக்கல்கள் உருவாகும் வாய்ப்புண்டு. அதுபற்றியும் நாம் சிந்திக்கவேண்டும் என்றார். (அ-த)

## ஒப்பந்தத்தை மீறுவதாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு 1987 ஜூலை ஒப்பந்தத்தை ரத்துச் செய்து புதிய ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கருத்து வெளியிட்டிருக்கும் வேளையில் —

இந்தியா நேரடி ஆட்சேபம் தெரிவித்திருப்பது இரு நாடுகளுக்குமிடையேயான உறவில் மீண்டும் இருள் சூழ வழிகோலும் — என்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி ராஜீவும், ஜே. ஆரும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் இணைப்பின் 4 ஆவது சரத்தின் (ஈ) பகுதியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''அந்நிய நாடுகளின் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்களையிட்டு மறுபரிசீலனை செய்யவும், இலங்கையில் உள்ள அந்நிய கூட்டுத்தாபனங்கள் செய்திகள் கூறும் நிலையில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், இராணுவச் செய்திகள் மற்றும் உளவுச் செய்திகள் அனுப்பாமல் தடை செய்ய வேண்டும் என்றும் இருசாரப்பிலும் இணங்கப்பட்டுள்ளது.'' எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' வின் அதிசக்தி வாய்ந்த ஒலிபரப்பு நிலையம் ஒன்றை நீர்கொழும்புப் பகுதியில் நிறுவ இலங்கை அமெரிக்காவுக்கு அனுமதி அளித்திருக்கிறது.

அதேபோல ஜேர்மன் வானொலி ஒலிபரப்பு நிலையம் ஒன்றைத் திருகோணமலையில் நிறுவவும் இலங்கை அரசு அனுமதி அளித்திருக்கிறது.

அமெரிக்க அதிசக்தி ஒலிபரப்பு நிலையம் இராணுவச் செய்திகள் மற்றும் உளவுச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள முடியும் எனக் கருதப்படுகிறது.

அதனாலேயே இந்திய வெளியுறவுச் செயலாளர், சார்க் மாநாட்டுக்கு மாலே செல்லும் வழியில் கொழும்பு வந்து தமது நாட்டின் ஆட்சேபத்தைத் தெரிவித்தார் என்று அறியப்படுகிறது.

சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர் நிலை மாநாடு நாளை (ஜூலை 2 இல்) மாலைதீவில் ஆரம்பமாகிறது.

இந்த மாநாட்டில் இந்தியாவின் புதிய வெளியுறவு அமைச்சர் திரு மாதவ் சிங் சோலங்கியும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு. ஹரோல்ட் ஹேரத்தும் சந்தித்து பரஸ்பரம் இரு நாட்டுப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-உ-எ)

## மட்டக்களப்பு...

தொடர்ந்து திருமலை, அம்பாறை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களுடன் சேர்த்து மொத்தம் ஒருலட்சத்து 22 ஆயிரத்து 566 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

★ எனினும் மே மாதத்தில் அந்த எண்ணிக்கை 85 ஆயிரத்து 742 குடும்பங்களாகக் குறைந்தது.

★ ஏறாவூர்ப்பற்று, போரதீவுப்பற்று, கோறளைப்பற்று வடக்கு, மண்முனை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ மட்டு — திருகலை வீதியில், ஊறணி முதல் ஓட்டமாவடி வரையிலான பகுதியில் வசித்த மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்தனர்.

★ இம் மாவட்ட மக்களின் ஜீவனோபாயமான விவசாயம், மீன்பிடி, வியாபாரம் மற்றும் போக்குவரத்து என்பன வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

விசேட திட்டம் ஒன்று தயாரிக்கப்படாதவரை, இவற்றை பழைய நிலைக்குக் கொண்டுவர நீண்ட காலம் எடுக்கும். (அ)

## ஜெயலலிதா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள புதிய சூழ் நிலையில் இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் சம்பந்தமான உறவை இந்தியா மீளாய்வு செய்ய வேண்டிய நிலை இப்போது ஏற்பட்டிருப்பதாக மட்டும் பிரதமர் நரசிம்மராவ் கூறியிருக்கிறார் — என்று ஆஸ்திரேலிய வானொலியின் புதுடில்லிச் செய்தியாளர் தெரிவித்தார். (ஓ-ன)

## தற்கொலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மும் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தேடப்படும் இரண்டு இசுசு வாகனங்களும் இப்போது கொழும்புப் பகுதியில் வெறுமனே ஓடித் திரிவதாகத் தாம் நம்புவதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பெற்றுக் கொள்ளப்படும்.

1. சைவசித்தாந்தத்தில் பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு)
2. மெய்யியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
3. மொழியியல் / இந்து நாகரிகத்தில் உதவி விரிவுரையாளர்.

### சம்பள அளவுத்திட்டம்:

பேராசிரியர்: ரூபா 12 200 - 6x300 14,000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I: ரூபா 9,600 - 8x250 - 11,600/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000 - 5x250 - 9,250/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3 900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு.

(துறைத்தலைவரினால் ஓராண்டுச் சேவையை திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரைப் பீடாதிபதி விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை 4,500/- ரூபா 10x200 - 6,500 (மாதம் ஒன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்.)

பேராசிரியர் பதவிக்கு விண்ணப்ப முடிவுத் திகதி 1991 - 09 - 30 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1991 - 08 - 07 ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச. மீ. அளவுடைய கடித உறையும், ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச. மீ. அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கணத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: சைவசித்தாந்தப் பேராசிரியர் [அறக்கொடைத்தவிசு] பதவிக்கான நியமனம் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாக இருக்கும்.

-பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
1991-06-26.

[சி/0206]



அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
இன்று [01-07-91] மாலை 6.45 மணிக்கு
விசேட காட்சியாக மேடையேறுகிறது!

# ஞானசௌந்தரி

(இசை நாடகம்)

இடம்:- திருமறைக் கலாமன்ற அரங்கு
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பு
திருமறைக் கலாமன்றம்

ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்கூட்டியே ஆசனப் பதிவு செய்துகொள்ளுங்கள். C/0210



## வைத்திய சேவை

நரம்புத் தளர்ச்சி, வாதரோகம், தலைமுடி உதிர்தல், சர்ம வியாதிகள், மாதவிடாய்க் கோளாறுகள் உட்பட சகல ரோகங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M. - R. A. M. P. (SriLanka)

சிவா வைத்தியசாலை,
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு,
(17369)


# மரண அறிவித்தல்கள்

## அருட்திரு ஜான் ஸ்பம்பதி அ.ம.தி.
### Rev. Fr. Jean Spampatti omi

அமல மரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்திரு. ஜான் ஸ்பம்பதி அடிகளார் [30-06-91] நேற்றுக் காலமானார்.

கொழும்புத்துறை அமல உற்பவத்தில் இவரது பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (01-07-91) திங்கட்கிழமை பி. ப. 2 மணிவரை வைக்கப்பட்டு பின்பு யாழ் மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பேராலயத்தில் பி. ப. 4 மணிக்கு நடைபெறும் இரங்கற் கூட்டுத் திருப்பலியுடன் இவரது இறுதிச் சடங்குகளும் இடம்பெறும்.

தொடர்பகம்.
657/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அருட்திரு. P.P. பிலிப், அ.ம.தி.
அமல மரித் தியாகிகள்
மாகாணத் தலைவர்.

(17133)

## முருகேசபிள்ளை அப்புலிங்கம்

மாதகலைச் சேர்ந்த திருவாளர் முருகேசபிள்ளை அப்புலிங்கம் அவர்கள் நேற்று (30-6-91) காலமானார்.

அன்னார் அம்பிகையம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பவதி, சற்குணலீலா, ஆனந்தபுவிராசா, பரஞ்சோதி, விமலராசா, அமுதா, செல்வராதா (உமா), சுதா, கிரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை, காலஞ்சென்ற நவகோடிலிங்கம், செல்லக்கண்டு, அன்னக்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமலிங்கம், காலஞ்சென்ற சிங்காரவேலு, கண்டுமணி அகியோரின் அன்பு மைத்துனரும், குகமயில், நாகேந்திரன், சிதம்பரநாதன், குமாரராணி, பத்மாவதி, தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், பூங்கோதை, சேந்தன், மைந்தன், [illegible], பூங்குழலி, பூங்கொடி, ரூபி, [illegible], [illegible], அஜந்தன், தவிரவன், [illegible] ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (1-7-91) காலை 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
பொ. நாகேந்திரன்
(மருமகன்)

[illegible]
மாதகல் [illegible],
மாதகல்.

(17134)

## வேலாயுதபிள்ளை செல்வரத்தினம்

(பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம்)

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த திரு. வே செல்வரத்தினம் நேற்று (30-6-91) காலமானார்.

இவர் தவமலரின் அன்புக் கணவரும், தவச்செல்வம் (தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), செல்வரஞ்சன் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, திருநெல்வேலி), செல்வரதி, செல்வநிதி (பளை மகா வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (1-7-91) 4.00 மணியளவில் எழுதுமட்டுவாளில் நடைபெறும்.

தகவல்;
செ. தவச்செல்வம்

புகையிரத நிலையப் பக்கம்,
எழுதுமட்டுவாள்.

(17135)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 1-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org